# ST CELESTINE
# APRIL 6



ஏப்ரல் 6

# புனித செலஸ்தீன் (-432)

உரோமைக் குருக்கள் மத்தியில் இவர் பெரும் புகழுடன் வாழ்ந்து வந்தார். பாப்புவான முதல் பொனிபாஸ் இறந்ததும் இவர் பாப்புவாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அச்சமயத்தில் புசலா நகரில் ஆயராக இருந்தவர் அந்தோனி என்பவர். கொடுங்கோல் ஆட்சிபுரிந்து மக்களை நிர்ப்பந்தித்து வந்தார். இந்த குற்றங்கள் எண்பிக்கப்பட்டிருந்தது. பாப்பானவர் விசாரித்த பின் சில ஆயர்களுக்குக் கடிதம் எழுதி குறிப்பிட்ட சில ஊழல்களைத் திருத்தும்படி கட்டளையிட்டார். "கிறிஸ்துநாதர் எங்கெல்லாம் வணங்கப்படுகிறாரோ அந்த இடங்களிலெல்லாம் நான் விழிப்பாய் இருக்க வேண்டும்" என்பார். இங்கிலாந்தில் பரவியிருந்த ஒரு பதிதக் கொள்கையை எதிர்த்துப் போராடும்படி புனித ஜெர்மான்ஸ் என்பவரை இவர் அனுப்பினார்.

**சிந்தனை:**

"கிறிஸ்தவர்கள் புண்ணியத்தில் வளர வேண்டும். கிறிஸ்துநாதரைப் போல் வாழ வேண்டும்". இதைப்பற்றி விழிப்பாயிருப்பது ஆயர்களின் கடமை.

**செபம்:**

ஆண்டவரே, எப்பொழுதும் விழிப்பாயிருக்கும் ஆயர்களையும், குருக்களையும் திருச்சபைக்கு நிரம்பத் தாரும்.




(C) 2009 John Sheppard - Distributed by Catholic Online - www.catholic.org